தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஏ. சோமசுந்தரம், பி.எச்டி.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730
94435 78172

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர், தேதி: 28-3-2014
ஆசிரியர்,

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தற்போது நடும் மரவள்ளிக்கிழங்கிற்கு அறுவடையின் போது நல்ல விலை கிடைக்கும்

மரவள்ளிக்கிழங்கு வெப்பமண்டல பகுதிகளான தெற்கு தீபகற்ப இந்தியாவில் பயிரிடப்படும் மிக முக்கியமான கிழங்கு வகையாகும். இக்கிழங்கில் மாவுச்சத்து, அதிகளவில் உள்ளது. இவற்றை கிழங்காகவும், பதப்படுத்தப்பட்டு சில்லுக்கள், ஐவ்வரிசி மற்றும் சேமியாவாகவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் இக்கிழங்கு கால்நடைகளுக்கு தீவனமாகவும், தொழிற்சாலைகளில் மாவு, எத்தனால் மற்றும் குளுக்கோஸ் தயாரிக்கவும் பயன்படுத்தப்படுகிறது.

2012-13ல் உலகளவில் 262 மில்லியன் டன்கள் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. நைஜீரியா (54 மில்லியன் டன்கள்), இந்தோனேசியா (23.92 மில்லியன் டன்கள்), பிரேசில் (23 மில்லியன் டன்கள்) மற்றும் தாய்லாந்து (22.50 மில்லியன் டன்கள்) போன்ற நாடுகளில், மிக அதிகமாக மரவள்ளி கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது.

இந்தியாவில் 2.43 இலட்சம் எக்டரில் மரவள்ளிக் சாகுபடி செய்யப்பட்டு, 9.94 மில்லியன் டன்கள் உற்பத்தி செய்யப்பட்டது. மேலும் மரவள்ளிக்கிழங்கு கேரளா, மேகாலயா, அசாம் மற்றும் ஆந்திரப்பிரதேசம் போன்ற மாநிலங்களில் பரவலாகப் பயிரிடப்படுகிறது. 2012-13ல் ரூ.152.4 மில்லியனாக இருந்த மரவள்ளிக்கிழங்கு ஏற்றுமதி 2013-14ல் (ஏப்ரல் - டிசம்பர்) 145.1 மில்லியன் ரூபாயாக குறைந்துள்ளது. இந்தியாவிலிருந்து பச்சை கிழங்குகளாகவும், மாவுப்பொருள்களாகவும், ஐவ்வரிசி மற்றும் நார்க்கழிவாகவும் மத்திய கிழங்கு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழ்நாடு மற்றும் கேரளா மாநிலங்களில், மரவள்ளிக்கிழங்கு அதிகமாக பயிரிடப்படுகிறது. இவ்விரு மாநிலங்களும் இந்தியாவின் மொத்தச்சாகுபடி பரப்பளவில், 98 சதவீதம் பங்களிக்கின்றன. கேரளாவில் இக்கிழங்கு உணவுப் பொருளாகவும், தமிழ்நாட்டில் மதிப்பூட்டப்பட்ட வர்த்தகப் பொருளாகவும் பயன்படுத்தப்படுகிறது. தமிழ்நாட்டில் இக்கிழங்கின் மொத்த சாகுபடி பரப்பளவு 1.05 இலட்சம் எக்டர் ஆகும். இதில் நாமக்கல் (27.03 ஆயிரம் எக்டர்), தர்மபுரி (18.04 ஆயிரம் எக்டர்) சேலம் (17.08 ஆயிரம் எக்டேர்), விழுப்புரம் (12.26 ஆயிரம் எக்டர்) மற்றும் ஈரோடு (5.89 ஆயிரம் எக்டர்) ஆகியன மரவள்ளிக்கிழங்கு பயிரிடும் முக்கிய மாவட்டங்களாகும். மேற்கூறிய, மாவட்டங்கள் சேர்ந்து, தமிழ்நாட்டின் மொத்த மரவள்ளிக்கிழங்கின் சாகுபடி பரப்பளவில், 76 சதவீதம் பங்களிக்கின்றன. மேலும், இக்கிழங்கின் சாகுபடிபரப்பு திருச்சிராப்பள்ளி (5.97 ஆயிரம் எக்டேர்), கடலூர் (3.40 ஆயிரம்

எக்டேர்), கன்னியாகுமரி (2.71 ஆயிரம் எக்டர்), கரூர் (2.36 ஆயிரம் எக்டர்) மற்றும் திருவண்ணாமலை (2.36 ஆயிரம் எக்டர்) போன்ற மாவட்டங்களில் வெகுவாக அதிகரித்து வருகின்றது.

தமிழ்நாட்டில், மரவள்ளிக்கிழங்கு பயிரானது, இறவையில் (மார்ச் - ஏப்ரல்) மற்றும் மானாவாரியில் (ஜுன்-ஜுலை, செப்டம்பர்- டிசம்பர்) தென்மேற்கு மற்றும் வட கிழக்கு பருவ மழை காலங்களில் பரவலாகப் பயிரிடப்படுகிறது. மூன்று வகை வீரிய ஒட்டு இரகங்கள் சாகுபடிக்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றன. அவை முறையே, H-226, H-165 மற்றும் முள்ளுவாடி (MVD-1) போன்றவையாகும். இவ்வகை கிழங்கு வகைகள் யாவும் பெரும்பாலும், தொழிற்சாலைகளில், மாவு மற்றும் ஜவ்வரிசி தயாரிக்கப் பயன்படுத்தப்படுகிறது. இம்மூன்று வீரிய ஒட்டு இரக வகைகளே சேலம், தர்மபுரி மற்றும் நாமக்கல் மாவட்டங்களின் மொத்த மரவள்ளிக்கிழங்கின் பரப்பளவில், 75 சதவீதத்தைக் கொண்டுள்ளன.

இச் சூழ்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 10 வருடங்களாக மரவள்ளிக்கிழங்கு அதிகமாக பயிரிடப்படும் சேலம் மற்றும் அதனை சுற்றியுள்ள சமவெளி பகுதிகளில் விளைந்த கிழங்கிற்கு, சேலம் மொத்தச்சந்தைகளில் நிலவிய 10 வருட விலைப்பற்றிய ஆய்வு மேற்கொண்டது. ஆய்வு முடிவுகளின்படி மார்ச் மாதத்தில் சாகுபடி செய்யப்பட்டு நவம்பர் - டிசம்பர் 2014ல் அறுவடைக்கு வரும் மரவள்ளிக்கிழங்கு கிலோவிற்கு ரூ.12 முதல் 14 வரை இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422 -2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயமுத்தூர் - 641 003.
தொலைபேசி: 0422-6611374 / 6611283

மக்கள் தொடர்பு அலுவலர்